

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

# பெரியாழ்வார் திருமொழி

## நான்காம்பத்து

---

### 5-ஆம் திருமொழி - ஆசைவாய்

*

* ஆசைவாய்ச்சென்றசிந்தையராகி அன்னைஅத்தன்என்புத்திரர்பூமி *
வாசவார்குழலாளென்றுமயங்கி மாளுமெல்லைக்கண்வாய்திறவாதே *
கேசவா! புருடோத்தமா! என்றும் கேழலாகியகேடிலீ! என்றும் *
பேசுவாரவர்எய்தும்பெருமை பேசுவான்புகில்நம்பரமன்றே. (1)

சீயினால்செறிந்தேறியபுண்மேல் செற்றலேறிக்குழம்பிருந்து * எங்கும்
ஈயினால்அரிப்புண்டுமயங்கி எல்லைவாய்ச்சென்றுசேர்வத்ன்முன்னம் *
வாயினால்நமோநாரணாவென்று மத்தகத்திடைக்கைகளைக்கூப்பி *
போயினால்பின்னைஇத்திசைக்குஎன்றும்பிணைகொடுக்கிலும்போகவொட்டாரே. (2)

சோர்வினால்பொருள்வைத்ததுண்டாகில்சொல்லுசொல்லென்றுகற்றுமிருந்து *
ஆர்வினவிலும்வாய்திரவாதே அந்தகாலம்அடைவதன்முன்னம் *
மார்வமென்பதோர்கோயிலமைத்து மாதவனென்னும்தெய்வத்தைநாட்டி *
ஆர்வமென்பதோர்பூவிடவல்லார்க்கு # அரவதண்டத்தில்உய்யலுமாமே. (3)

மேலெழுந்ததோர்வாயுக்கிளர்ந்து மேல்மிடற்றினைஉள்லெழவாங்கி *
காலும்கையும்விதிர்விதிர்த்தேறிக் கண்ணுறக்கமதாவதன்முன்னம் *
மூலமாகியஒற்றையெழுத்தை மூன்றுமாத்திரைஉள்ளெழவாங்கி *
வேலைவண்ணனைமேவுதிராகில் விண்ணகத்தினில்மேவலுமாமே. (4)

மடிவழிவந்துநீர்புலன்சோர வாயிலட்டியகஞ்சியும்மீண்டே *
கடைவழிவாரக்கண்டமடைப்பக் கண்ணுறக்கமதாவதன்முன்னம் *
தொடைவழிஉம்மைநாய்கள்கவரா சூலத்தல்உம்மைப்பாய்வதும்செய்யார் *
இடைவழியில்நீர்கூறையும்இழவீர் இருடீகேசனென்றேத்தவல்லிரே. (5)

அங்கம்விட்டவையைந்துமகற்றி ஆவிமூக்கினில்சோதித்தபிள்ளை *
சங்கம்விட்டவர்கையைமறித்துப் பையவேதலைசாய்ப்பதன்முன்னம் *
வங்கம்விட்டுலவும்கடற்பள்ளிமாயனை மதுசூதனைமார்பில்
தங்கவிட்டுவைத்து * ஆவதோர்கருமம்சாதிப்பார்க்கு என்றும்சாதிகலாமே. (6)

தென்னவந்தமர்செப்பமிலாதார் சேவதக்குவார்போலப்புகுந்து *
பின்னும்வன்கயிற்றல்பிணித்தெற்றிப் பின்முன்னாகஇழுப்பதன்முன்னம் *
இன்னவன்இனையானென்றுசொல்லி எண்ணிஉள்ளத்திருளறநோக்கி *

மன்னவன்மதுசூதனனென்பார் வானகத்துமன்றாடிகள்தாமே. (7)

கூடிக்கூடிஉற்றார்கள்இருந்து குற்றம்நிற்கநற்றங்கள்பறைந்து *
பாடிப்பாடிஓர்பாடையிலிட்டு நரிப்படைக்குஒருபாகுடம்போலே *
கோடிமூடியெடுப்பதன்முன்னம் கௌத்துவமுடைக்கோவிந்தனோடு *
கூடியாடியஉள்ளத்தரானால் குறிப்பிடம்கடந்துஉய்யலுமாமே. (8)

வாயொருபக்கம்வங்கிவலிப்ப வார்ந்தநீர்க்குழிக்கண்கள்மிழற்ற *
தாய்ஒருபக்கம்தந்தைஒருபக்கம் தாரமும்ஒருபக்கம்அலற்ற *
தீஒருபக்கம்சேர்வதன்முன்னம் செங்கண்மாலொடும்சிக்கெனச்சுற்ற
மாய் * ஒருபக்கம்நிற்கவல்லார்க்கு அரவதண்டத்தில்உய்யலுமாமே. (9)

* செத்துப்போவதோர்போதுநினைந்து செய்யும்செய்கைகள்தேவபிரான்மேல்
பத்தராயிறந்தார்பெறும்பேற்றைப் பாழித்தோள்விட்டுசித்தன்புத்தூர்க்கோன் *
சித்தம்நன்கொருங்கித்திருமாலைச் செய்தமாலைஇவைபத்தும்வல்லார் *
சித்தம்நன்கொருங்கித்திருமால்மேல் சென்றசிந்தைபெறுவர்தாமே. (10)

# அரவதண்டம் - யமபடரால் வரும் க்லேசம்

அடிவரவு : ஆசை சீயினால் சோர்வினால் மேல் மடி அங்கம் தென்னவன் கூடி வாய் செத்து காசு.